**ராஜாங்கனை பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ராஜாங்கனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 5 ஆம் கட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள நூலகத்திற்கு சுகாதாரத் திணைக்களத்திலிருந்தும் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்தும் ரூபா 132,603 தொகையான 554 நூலகப் புத்தகங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 197,540 தொகையான கடன் மீதிகள் செலுத்தப்பட வேண்டிய மீதிகளாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 519,750 கூட்டுத்தொகையான 04 சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,242,115 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,150,044 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 கடை வாடகை

(அ) பிரதான விலை மதிப்பாளரால் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி சபையின் கடைகள் தொடர்பாக மதிப்பீட்டுப் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம்மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் நிலப் பெறுமதியில் 02 சதவீதத்தை விஞ்ஞாத வரியினை வருடாந்தம் காணி உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1994 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்சீபீ/எல்ஜீ/9/7/19(i) ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடைவ கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டு வந்தது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,844,768 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 2013 ஆம் ஆண்டிற்காக கணக்கிடப்பட்ட ரூபா 221,000 ஆன முத்திரைக் கட்டண வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 13 ஊழியர்ககளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,844,768 தொகையான நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு சபையால் நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகளைப் பலப்படுத்துதல் வேலைத்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 தொகையான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கிவல்லை.

(இ) மாகாண சபை பண்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 419,308 தொகை பொருட்கள் 2016 மே 25 ஆந் திகதி வரையிலும் உரிய நலனாலிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 2,421,532 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கிடைக்க வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 1,182,568 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய செலுத்த மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 யன்படுத்தப்படாத சொத்துக்கள்

ரூபா 682,815 தொகையான 04 உபகரண உருப்படிகள் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஊழியர் கடன் முகாமைத்துவம்